செ.வெ.எண்:57 நாள்:29.07.2016

# பத்திரிகைச் செய்தி

அனைவருக்கும் கல்வி இயக்கம், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த வட்டார வளமையங்கள் மூலமாக, இம்மாவட்டத்தில் உள்ள 18 வயது வரை உள்ள தொடக்கக்கல்வி பயிலும் அனைத்து மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கான மருத்துவ மதிப்பீட்டு முகாம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இம்முகாமானது 01.08.2016 அன்று குன்றாண்டார் கோயில் ஒன்றியத்திற்கு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கீரனூரிலும், அன்னவாசல் ஒன்றியத்திற்கு அரசு மேல்நிலைப்பள்ளியிலும்., 03.08.2016 அன்று கந்தர்வகோட்டை ஒன்றியத்திற்கு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கந்தர்வகோட்டையிலும்., கறம்பக்குடி ஒன்றியத்திற்கு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கறம்பக்குடியிலும்., 04.08.2016 அன்று விராலிமலை ஒன்றியத்திற்கு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, விராலிமலையிலும்., புதுக்கோட்டை ஒன்றியத்திற்கு அரசு உயர்தொடக்கப்பள்ளி, புதுக்கோட்டையிலும்., 05.08.2016 அன்று திருவரங்குளம் ஒன்றியத்திற்கு வட்டார வளமையம் திருவரங்குளத்திலும் 08.08.2016 அன்று திருமயம் ஒன்றியத்திற்கு அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருமயத்திலும்., அரிமளம் ஒன்றியத்திற்கு வட்டார வளமையம் அரிமளத்திலும்., 09.08.2016 அன்று பொன்னமராவதி ஒன்றியத்திற்கு வட்டார வளமையம் பொன்னமராவதியிலும்., 10.08.2016 அன்று அறந்தாங்கி ஒன்றியத்திற்கு டி.இ.எல்.சி நடுநிலைப்பள்ளி, அறந்தாங்கியிலும், 11.08.2016 அன்று ஆவுடையார்கோயில் ஒன்றியத்திற்கு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆவுடையார்கோயிலிலும்., 12.06.2016 அன்று மணமேல்குடி ஒன்றியத்திற்கு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, மணமேல்குடியிலும் சிறப்பாக நடைபெற உள்ளது.

இம் மருத்துவ மதிப்பீட்டு முகாமில் மருத்துவ அலுவலர்கள் கலந்து கொண்டு தகுதியான பயனாளிகளை தேர்வு செய்து மேல் சிகிச்சைக்கு அனுப்புதல் அடையாள அட்டைகள் பெற்றுத் தருதல் உதவி உபகரணங்கள் பெற்றுத்தருதல், அரசின் நலத்திட்டங்களை பெற நபர்களைத் தேர்வு செய்தல் போன்ற பணிகள் நடைபெறவுள்ளன. இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பெற்றோர்கள் 18 வயது வரையுள்ள மாற்றுத் திறனாளி குழந்தைகளை அழைத்து வந்து பயனடைய கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், இம்முகாம்களில் கலந்துகொண்டு உதவி உபகரணங்கள் பெற விரும்புவோர் 1.குடும்ப அட்டை(ரேசன்அட்டை), 2.மாற்றுத்திறனாளிகள் தேசிய அடையாள அட்டை, 3. வருமானச் சான்று மற்றும் 4. பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள் -4 ஆகிய ஆவணங்களைக் கொண்டு வருதல் வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**